# இன்று மார்ச் 08 சர்வதேச பெண்கள் தினமாகும்

முழு உலகிலுமுள்ள பெண்கள் பல்வேறு விதத்திலும் இன்றைய தினத்தைக் கொண்டாடுகின்றனர்.

## இலங்கையிலுள்ள நாம் எதன் பொருட்டு குரல்கொடுப்போம்?

## இன்றைய நாளில் எமது வேண்டுகோள் என்ன?




**அதிகரிக்கின்ற பொருட்களின் விலையினால் பெண்களாகிய நாமே அதிகம் பாதிக்கப்படுகிறோம்**








அரிசி ஒரு கிலோ 80/- ரூபாய்
கேஸ் சிலிண்டர் 1750/- ரூபாய்
ஒரு தேங்காய் 45/- ரூபாய்
மின் கட்டணம், நீர் கட்டணம் அதிகரிக்கின்றது
போக்குவரத்துக் கட்டணம் எம்மை அறியாமலே அதிகரிக்கிறது.
அனைத்துமே நெருப்பு விலை!

## இவை மட்டுமா...

- யுத்தத்தால் மரணிக்கின்றவர்கள், காணாமல் போகின்றவர்கள், எமது பிள்ளைகள். தமிழராயினும், சிங்களவராயினும், முஸ்லிம்களாயினும் நாம் உலகத்திற்கு ஈன்றெடுத்த உயிர்கள்,
- கொடூரமான யுத்த வன்முறைகளால் இடம்பெயர்கின்ற ஆயிரக் கணக்கான மனிதர்களில் பாதுகாப்பற்ற நிலைக்கு அதிகமாக உள்ளாகின்றவர்கள் எம்மைப் போன்ற பெண்களே,
- நாட்டின் பொது மக்களது வாழ்க்கை சீர்குலைந்துள்ளமையால் இழக்கப்படுகின்ற உயிர்களைப் போன்றே காணாமற்போகின்ற பிள்ளை, கணவன், உறவினர்களுக்காக இன்னல்களுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாகின்றவர்களும் எம்மைப் போன்ற பெண்களே,
- யுத்தத்தின் மேலுமொரு பெறுபேறான விதவை மனைவியர், தனித் தாய்மார்கள் என்ற வகையில் அனைத்துச் சுமைகளையும் சுமக்கின்றவர்கள் எம்மைப் போன்ற பெண்களே,
- பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் வன்முறைகளுக்கு முகம்கொடுத்து, வல்லுறவுக்கு உள்ளாகி, இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கின்ற பிரதானமான வருமான வழிவகைக்கும் அதிகம் தோள் கொடுக்கின்றவர்களும் எம்மைப் போன்ற பெண்களே,
- வீதிவழியே இன்னல்களுக்கு உள்ளாகி, குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்து, தொழில்சார் உரிமைகள்கூட இல்லாமல், ஆடைத் தொழிற்சாலைகளுக்கு உழைப்பைத் தாரைவார்த்து நாட்டிற்கு வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கின்றவர்களும் எம்மைப் போன்ற பெண்களே,
- சமமான வேலைகளுக்கு பாரபட்சமான சம்பளத்தைப் பெற்று கமத்தொழிலிலும், மிகக் கஷ்டமான சேவை நிலைமைகளின் கீழ் பெருந்தோட்டங்களிலும் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு உழைப்பைத் தாரைவார்க்கின்றவர்களும் எம்மைப் போன்ற பெண்களே,
- பிள்ளைகளைப் பெற்றெடுத்து, வளர்த்து, வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்து, அதற்கு எவ்விதப் பாராட்டுக்களையோ அல்லது பெறுமதியையோ பெறாது சமூகத்தின் முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றவர்களும் எம்மைப் போன்ற பெண்களே,
- பாடசாலையில், ஆஸ்பத்திரியில், வேலைத் தலத்தில் மட்டுமன்றி வீதிவழியே வல்லுறவுக்கும், பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றவர்களும் எம்மைப் போன்ற பெண்களே.

## ஆயினும் இந்நாட்டில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற சபைகளில் எமது பங்களிப்பு எவ்வளவு குறைவு?

- பாராளுமன்றத்தில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை கைவிரல் அளவு சொற்பமாகும்.
- அதேபோன்று மாகாண சபைகள், பிரதேச சபைகள் ஆகிய அனைத்து இடங்களிலும் மிகவும் சொற்பமான வீதத்தினரே உள்ளனர்.
- எமது நாடு சுதந்திரம் பெற்று 60 ஆண்டுகளை மிக அண்மையிலேயே கொண்டாடியது.

**60 வருடங்களுக்குப் பின்னர் இந்நாட்டின் பெண்களது நிலைமையைத் திரும்பிப் பார்த்தால் எம்மால் மகிழ்ச்சியடைய முடியுமா? உண்மையிலேயே முடியாது.**

அவ்வாறெனில் இந்நிலைமையை நாம் எவ்வாறு மாற்றலாம்? எப்போதும் எமது முன்னிலையிலுள்ள சவால் இதுவாகும்.

பாரபட்சம் காட்டாது இம்சைகளுக்கும் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாகாது முழுமையான மனிதநேயத்திற்கு உரிமை கோரக்கூடிய சமாதானமான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு எமது முன்னிலையில் ஒரு பெரும் பொறுப்பு உள்ளது.

**அன்னையர்களே, சகோதரிகளே வாருங்கள், இதன் பொருட்டு ஒன்றிணைவோம்!**

இலங்கை அன்னையர்கள் மற்றும் புதல்வியர்கள் அமைப்பு